
# ஆராதனையின் போது விசுவாசிகளுக்கு வேதாகமப்படி போதிக்கவும்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் P7b பாடத்தை போதிக்கவும

**ஜெபம்:** “கர்த்தாவே, இயேசுவையும் அவரது அப்போஸ்தலர்களையும் போல் போதிக்க எங்களுக்கு உதவும்.”

தற்போதையத் தேவைகளுக்கும் வட்டாரப் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்துகொள்க.

## 1. புதிய ஏற்பாட்டின் படி போதிக்க ஆயத்தமாகவும்.



தேவன் தமது வார்த்தையை எவ்வாறு பட்டயத்தோடு ஒப்பிடுகிறார் என்பதை எபிரேயர் 4:12ல் காண்க.

போதிப்பதற்கான வழிகாட்டுதல்களை மத்.13ல் காண்க.

இயேசு ஒரு பிரசங்க மேடையின் பின்னாக நின்று போதித்தாரா என்பதை வசனங்கள் 1–2ல் காண்க.

*(பதில்: இயேசு அடிக்கடி உட்கார்ந்தவாறே போதித்தார். சில சமயம் அவர் ஒரு படகில் அமர்ந்தார். மக்கள் எங்கு இருந்தார்களோ அங்கு அவர் போதித்தாரே தவிர ஒரு வகுப்பறையில் அவர் போதிக்கவில்லை. அவரது போதனை முன்மாதிரிகள் சீஷர்களால் எளிதில் பின்பற்றக் கூடியவைகளாக இருந்தன. நல்ல போதகர்கள் இவ்வாறே செய்கின்றனர்.)*

கூட்டத்திற்கு இயேசு போதிக்கும் முறையை வசனங்கள் 3–9 & 34–45ல் காண்க.

*(பதில்: இயேசு தேவ சத்தியங்களைக் கதைகளைக் கொண்டு போதித்தார். மக்கள் கதைகளை எளிதாக ஞாபகப்படுத்திப் பிறருக்கும் கூறமுடியும். மேலும், கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளுமாறு இயேசு பொதுமக்களைக் கேட்கவில்லை. நல்ல போதகர்கள், புதிய விசுவாசிகள் ஆயத்தமாகும் வரை அவர்களைப் பேசுமாறு கேட்பதில்லை.)*


இயேசு சீஷர்களுக்கு போதித்த விதத்தை வசனங்கள் 10–11 & 36ல் காண்க.

*(பதில்: இயேசு, சீஷர்களின் கேள்விகளை கவனமாகக் கேட்டு, அவர்களோடு உரையாடினார். குழுவின் எண்ணிக்கைக்கும் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கும் ஏற்ப அவர் தமது போதனை முறையை கையாண்டார்.)*



**யோசனைகள்:** எப்போதும் நீங்களே பேசிக்கொண்டு இருக்க வேண்டாம். புதிய தலைவர்களை உடைய புதிய மந்தைக்கு பிரசங்கமேடை சொற்பொழிவு ஒத்துவராது. எப்போதும் அவர்களே பேசிக்கொண்டு இருக்கும் போது சாத்தான் அவர்களுக்குப் பெருமையை உண்டு பண்ணுவான். அதனால் அவர்கள் விசுவாசிகளைக் கடிந்துகொண்டு அவர்களை அதைரியப்படுத்துவார்கள். ஒருவருக்கு ஒருவர் செய்யக்கூடிய 38 செயல்பாடுகளை புதிய ஏற்பாடு கூறுகிறது. சில செயல்பாடுகள் பல தடவை திரும்பத்திரும்பக் கூறப்பட்டுள்ளன. ஒருவருக்கு ஒருவர் ஐக்கியமாய் இருப்பது, மன்னிப்பது, தவறுகளை ஒத்துக் கொள்ளுவது, திருத்துவது, புத்திசொல்லுவது போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. இத்தகைய கூட்டு செயல்கள் சிறிய குழுக்களிலேயே சிறப்பாக அமையும்.

வார்த்தையைக் கேட்கும் எல்லாருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் ஒரேவிதமான தாக்குறவையே (effect) ஏற்படுத்துகிறாரா என்பதை வசனங்கள் 12–17ல் காண்க.



வயலில் விதைக்கும் ஒரு விவசாயியைப் பற்றிய இயேசுவின் கதையின் அர்த்தத்தை வசனங்கள் 18–23 ல் காண்க.

*(பதில்: நமது இருதயத்தில் தேவனுடைய வார்த்தை வேர் விடும் போது பரிசுத்தஆவியானவர் கனிகொடுக்கும்படி செய்வார்).*

உண்மையான போதகத்தை அறிந்து கொள்ள ஆவியானவர் நம்மை ஏன் பிரகாசிப்பிக்க வேண்டும் என்பதை வசனங்கள் **24–30 & 37–43** ல் காண்க.

சிறிய போதகத்தினால் ஏற்படும் விளைவின் அளவை வசனங்கள் **31–33ல் காண்க.**

தேவவார்த்தையை ஏற்றுக்கொள்வதாலும், புறக்கணிப்பதாலும் ஏற்படும் இறுதி விளைவுகள் ஒப்பிட்டு காட்டப்படுவதை வசனங்கள் 44–50 ல் காண்க.

போதகர்கள் பலதரப்பட்ட விஷயங்களை பயன்படுத்தலாமா என்பதை **வசனம் 52ல் காண்க.**

*(பதில்: இயேசு பொதுவான கல்வி அடிப்படையிலான போதகத்தை உபயோகிக்கவில்லை. கல்வி முறையை பகுத்தாய்வு எனலாம். ஒரு கொள்கையின் சிறுசிறு விவரங்களையும் அது பட்டியலிட்டுக் காட்டும். பழைய புதிய ஏற்பாடுகளில் இருந்தும் வரலாறு மற்றும் நிகழ்கால வாழ்க்கையில் இருந்தும் இயேசு விஷயங்களை தொகுத்துக் கொண்டு வந்தார். எல்லாவற்றையும் ஒன்று தொகுத்து ஒரே சித்திரமாக்கும் போதே நாம் தேவனையும் அவரது சத்தியங்களையும் பற்றி சிறந்த முறையில் அறிய முடியும். தேவன் பெரிதும் செயல்படுகிறவர்; வாழ்க்கையைப் பெரிதும் மாற்றுகிறவர்; அவர் நமது இருதயத்துக்கு மிகவும் நெருங்கியவர். இதனால் அவரை ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பண்புகளாலும் செயல்களாலும் பட்டியலிட்டு காட்ட முடியாது. அப்படிச் செய்தால் அது ஒரு சித்திரத்தின் வண்ணப் பொருட்களை ஆய்ந்து அதன் அழகை போற்ற முயல்வது போன்றதாகும்.)*

மக்கள் தமது போதகத்தை நடைமுறைப் படுத்தினார்களா என்று இயேசு எவ்வாறு நிச்சயப்படுத்திக் கொண்டார் என்பதை **வசனங்கள் 51–52ல் காண்க.**

*(இயேசு கேள்விகளைக் கேட்டார். அவரும் அவரது சீஷர்களும் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் அவர்கள் எவ்விதம் புரிந்து கொண்டனர் என்பது பற்றி கேட்டறிந்தனர். சிறந்த போதகர்கள் போதகம் குறித்து விவாதிக்க விசுவாசிகளுக்கு உதவி, அதை அவர்கள் கடைபிடிக்கும் திட்டம் தீட்டவும் உதவுகின்றனர்).*

நான்கு வேதாகம விவாதக் கேள்விகளை எழுப்பி வேத வசனங்களை மக்கள் விவாதிக்குமாறு உதவுங்கள்.

1. இந்த வசனத்தில் உங்களுக்கு பிடித்தது எது?
2. இதைக் குறித்த கேள்விகள் என்ன?
3. இதில் என்ன வாக்குத்தத்தம் அல்லது கட்டளை இருக்கிறது?
4. இதை நடைமுறைப்படுத்த நாம் என்ன திட்டமிட வேண்டும்?

போதகத்தின் நோக்கம் என்ன என்பது பற்றி **எபே. 4:11–16ல்** காண்க.

நல்ல போதகத்தின் விளைவாக யார் மந்தைக்கு சேவை செய்ய வேண்டும் என்பதை வசனங்கள் **11–12ல்** காண்க.

நல்ல போதகத்தின் விளைவாக ஏற்படும் விஷயங்களை **வசனங்கள் 13–16ல்** காண்க. தேவன் விதித்தது போல பிற செயல்பாடுகளோடு போதகமும் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதையும் காண்க.

**2. இந்த வாரத்தின் காரியங்களை உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்.**

புதிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும். மேலே குறிப்பிட்டுள்ள வழிகாட்டல்களை இணைந்து படிக்கவும். ஆராதனை வேளையிலும், வீடுகளிலும் போதிக்க அவர்கள் உதவட்டும்.

புதிய சபைகளில் நீங்கள் பயிற்றுவிக்கும் ஊழியர்கள் இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்ற உதவுங்கள்.

வீடுகளுக்கு சென்று மக்களின் தேவைகளையும், கேள்விகளை அறியவும். இதனால் அவை குறித்து உங்களுக்கு போதிக்க முடியும்.

## 3. அடுத்த ஆராதனை வேளைக்கு செய்ய வேண்டியதை உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்.

தேவ வார்த்தை எவ்வாறு பட்டயத்தைப் போன்றது என்பதை **விளக்குக.** (எபி. 4:12)

மத்தேயு 13ஆம் அதிகாரத்தில் காணப்படும் போதகம் குறித்த வழிமுறைகளை **விளக்கவும்.**

மத்தேயு 13 ல் காணப்படும் ஒன்றோ அல்லது இரண்டோ உவமைகளைக் **கூறவும்** அல்லது நடித்துக் காட்டவும். பின்னர் மேலே பட்டியலில் இடப்பட்டுள்ள நான்கு கேள்விகளையும் மக்களிடம் கேட்கவும். இது தேவ வசனங்களைப் பற்றி விவாதிக்க அவர்களுக்கு உதவும்.

சிறுவர்கள் தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

**கர்த்தரின் பந்தியில்** பங்குகொள்ளுமுன் சாலொமோன் இராஜா ஆலயத்தை பிரதிஷ்டை செய்வதைப் பற்றிக் கூறும் 1 இராஜா 8:10–13 ஐ வாசிக்கவும். தேவனுடைய பரிசுத்த ஆவி வாழ்வதால் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆலயம் என்பதை விளக்கவும். (1கொரி. 3:16)

தங்கள் குடும்பங்களிலும், பிற மக்களின் வீடுகளிலும் தேவ வார்த்தையைப் போதிப்பவர்கள் எவ்வாறு தேவன் தங்கள் வாழ்க்கையை மாற்றினார் என்பது பற்றி கூறவும்.

சேர்ந்து கொலொ. 3:16ஐ **மனப்பாடம் செய்க.**

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net